2. தகவல் கோரல்

(இ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகா கிராமங்களுக்கு நெய்யாறு இடதுகரைக் கால்வாயிலிருந்து தண்ணீர் தருதல்

திரு. என். நன்மாறன்: கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகாவில் ஒன்பது வருவாய் கிராமங்களில் உள்ள விவசாயிகளுடைய நலன் கருதி, நெய்யாறு இடதுகரைக் கால்வாயிலிருந்து தண்ணீர் பெற்றுத் தர உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு அவ்வளவுதான், உட்காருங்கள்.

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. சிவராஜ், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன். (குறுக்கீடுகள்) அடுத்த matter-க்குப் போயாகிவிட்டது. உட்காருங்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009-2011 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று இருபத்து எட்டாவது முதல் இருநூற்று முப்பது ஐந்தாவது வரையிலான எட்டு அறிக்கைகளைக் குழுவின் தலைவரின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

(ஆ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு திரு. கோவை தங்கம், மனுக்கள் குழுத் தலைவர்.